# மாகாணக் கல்வித் திணைக்களம்

## வட மாகாணம்

## மாகாணமட்ட இரண்டாந் தவணைப்பரீட்சை – 2016

## சைவநெறி

தரம் - 09 நேரம் :- 02 மணி

சுட்டெண் :........................................... புள்ளி :-

பகுதி I

**எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்**

சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

01. "ஆலமர செல்வன் " எனப் போற்றப்படுபவர் யார்?
    1 விநாயகர் 2 சிவன்
    3 முருகன் 4 விஷ்ணு

02. ஞானகுருவை தத்துவ நூல்கள் எவ்வாறு சிறப்பிக்கின்றன?
    1 சமயகுரு 2 சந்தானகுரு
    3 அருளுரு 4 தத்துவகுரு

03. "அன்பே சிவம்" எனக் கூறியவர் யார்?
    1 திருஞானசம்பந்தர் 2 ஔவையார்
    3 மெய்கண்டதேவர் 4 திருமூலர்

04. "எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்........" எனத் தொடங்கும் தாயுமானவர் பாடல் விளக்கும் விழுமியப் பண்பு யாது?
    1 உதவி செய்தல் 2 சகிப்புத்தன்மை
    3 உளத்தூய்மை 4 சமாதானம்

05. "பகிர்ந்துண்ணல்" எனும் விழுமியப் பண்பினை உணர்த்தும் ஔவையார் கூற்று
    1 அறம்செய்ய விரும்பு 2 யாவருக்குமாம் உண்ணும் போதொருகைபிடி
    3 ஐயம் இட்டுண் 4 மக்கள் சேவையே மகேசன் சேவை

06. வருடத்தில் குறிப்பிட்ட நாட்களில் சமய ஈடுபாட்டுடனும், விருந்துகளுடனும் கொண்டாடப்படும் சடங்கு
    1 விரதம் 2 பண்டிகை 3 வாழ்வியல் சடங்கு 4 குருபூசை தினம்

07. சித்திரைப் புத்தாண்டு தினத்தில் வரும் விஷபுண்ணிய காலத்தில் பாவம், தோஷம் நீங்க சைவசமயத்தவர் செய்யும் காரியம்
    1 மருத்துநீர் வைத்து நீராடுதல் 3 கைவிசேடம் வழங்குதல்
    2 ஆசிபெறல் 4 ஆலய வழிபாடு செய்தல்

08. சிவபெருமானுக்குரிய விரதம் எது?
    1 திருக்கார்திகை விரதம் 3 ஐப்பசி வெள்ளிவிரதம்
    2 மார்கழி திருவாதிரைவிரதம் 4 பங்குனித்திங்கள் விரதம்

09. வெற்றித்திருநாள் என அழைக்கப்படும் நாள் எது?
    1. மகாநவமி 2. விஜயதசமி 3. கொலுவைத்தல் 4. கும்பம் வைத்தல்



kalvi.lk

10. தெய்வத்திற்கு பலபேர் சொல்லி வழிபடும் மரபு எக்காலத்தில் காணப்பட்டது?
1 இருக்குவேத காலம் 2 யசூர்வேத காலம்
3 சாமவேத காலம் 4 அதர்வேத காலம்

11. இறைவனால் அம்மையே என அழைக்கப்பட்டவர் யார்?
1 காரைக்கால் அம்மையார் 2 புனிதவதியார்
3 இசைஞானியார் 4 ஔவையார்

12. முதல் ஏழு திருமறைகளையும் எவ்வாறு அழைப்பர்?
1 அடங்கன் முறை 2 தேவாரம்
3 தமிழ்மறை 4 தமிழ்வேதம்

13. இல்லகவிளக்கது என்ற தேவாரத்தின் பண் யாது?
1 கொல்லி 2 கௌசிகம்
3 காந்தார பஞ்சமம் 4 பழம் பஞ்சுரம்

14. திருவாசகத்தை பாடியவர் யார்?
1 மாணிக்கவாசகர் 3 திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்
2 சுந்தரமூர்த்திநாயனார் 4 திருநாவுக்கரசு நாயனார்

15. திருவிரட்டை மாலை எக்கடவுளுக்குரியது?
1 முருகன் 2 பிள்ளையார்
3 சிவபெருமான் 4 வைரவர்

16. பெரியபுராணத்தின் மறுபெயர் யாது?
1 திருக்கோவையார் 2 திருமந்திரம்
3 திருத்தொண்டர் புராணம் 4 பிரபந்தம்

17. பஞ்சாட்சர திருப்பதிகத்தில் உள்ளடங்கும் தேவாரம் எது?
1 துஞ்சலும் துஞ்சலில்லாத போது 2 இல்லக விளக்கது
3 நத்தார்படை 4 காதலாகி கசிந்து

18. திருப்பாவையின் எத்தனை பாசுரம் உண்டு?
1 60 2 21 3 30 4 25

19. உலக பிரசித்தி பெற்ற மஞ்சம் இலங்கையில் எங்குள்ளது?
1 வற்றாப்பளை கண்ணகியம்மன் கோயில்
2 மாவட்டபுரம் கந்தசுவாமி கோயில்
3 இணுவில் கந்தசுவாமி கோயில்
4 நல்லூர் கந்தசுவாமி கோயில்

20. கல்லால மரத்தின் கீழ் அமர்ந்துள்ள இறைவன் யார்?
1 நடராஜர் 2 சோமஸ்கந்தர்
3 சிவபெருமான் 4 தட்சணாமூர்த்தி

**(20 x 2 = 40 புள்ளிகள்)**



kalvi.lk

## பகுதி II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. பின்வரும் திருமுறைப் பாடல்களுள் இரண்டை வரிக்கிரமமாக எழுதி அப்பாடலின் பண், தலம்,பாடியவர் பெயர் என்பவற்றை குறிப்பிடுக.

1 "காதலாகி கசிந்து……."
5 "இல்லக விளக்கது….."
6 "ஏழிசையாய் இசை…"
7 "நையாத மனதினை…." (2X10=20 புள்ளிகள்)

02. "மனிதனை மனிதப் பண்பிலிருந்து உயர்த்தி தெய்வீக நிலைக்கு இட்டுச் செல்வது விழுமியங்கள்"

1 விழுமியப் பண்புகள் நான்கு தருக.
2 விழுமியம் என்ற சொல்லின் பொருள் தருக.
3 உளத் தூய்மை என்பது யாது?
4 தலைமைத்துவப் பண்புகள் வளர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் நான்கு தருக.
(2+3+3+2=10 புள்ளிகள்)

03. "ஆன்மீக விடுதலைக்கான வழிகளுள் சிறந்தது விரதங்களே"

1 விரதம் என்பதன் பொருள் யாது?
2 சிவ விரதங்கள் நான்கு தருக.
3 சிவராத்திரி விரதம் பற்றி புராணம் கூறும் கதை மூன்று தருக.
4 கொது வைத்தல் என்றால் என்ன? (3+2+3+2=10 புள்ளிகள்)

04. "வேத மோடாகமம் மெய்யாம் இறைநூல்"
1 நால் வேதங்களும் எவை?
2 ஆகமம் என்பதன் பொருள் யாது?
3 சைவநாற்பாதங்களும் எவை?
4 வேதங்களுள் மறு பெயர் நான்கு தருக. (2+4+2+2=10 புள்ளிகள்)

05. "தமிழ்மறை" எனப்போற்றப்படுபவை திருமுறைகள்
1 திருமுறை என்றால் என்ன?
2 திருமுறைகளை தொடுத்தவர் யார்? தொகுப்பித்தவர் யார்?
3 திருமுறைப் பாடல்கள் பாட முன்பும் பாடிய பின்பும் திருச்சிற்றம்பலம் சொல்வது ஏன்?
4 தேவாரங்களில் சிறப்புக்கள் நான்கு தருக. (2+2+2+4=10 புள்ளிகள்)

06. "ஆலயக் கிரியைகளுள் சிறப்பானது மகோற்சவக் கிரியையாகும்"
1 ஆலயக் கிரியைகள் எவை?
2 மகோற்சவம் என்பதன் பொருள் தருக.
3 இறைவனின் ஐந்தொழில்களும் எவை?
4 சூர்ணோற்சவம் என்பது யாது? (2+3+3+2=10 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
1 தைப்பொங்கல்
2 வீட்டுச்சடங்கு
3 காரைக்கால் அம்மையார்
4 புராணங்கள் (2X5=10புள்ளிகள்)



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන

kalvi.lk

## தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

**WHATSAPP**
**075 287 1457**